**SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA**

**FIRST YEAR EXAMINATION IN BACHELOR OF BUSINESS ADMINISTRATION /COMMERCE (EXTERNAL) – 2008 / 2009 HELD IN APRIL - 2009**

**BBA / COM 15 – MANAGEMENT AND ENTREPRENEURIAL SKILLS**

எல்லா வினாக்களுக்கும் விடைதருக

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01 (அ) எண்ணக்கருத்திறன், மனிதவளத்திறன், தொழில்நுட்பத்திறன் ஆகியவற்றை விபரிப்பதுடன் முகாமையாளர்களுக்கும் முகாமையாளர் அல்லாதவர்களுக்கு மிடையில் இவற்றின் பொருத்தப்பாடு பற்றியும் விபரிக்குக.

(05 புள்ளிகள்)

(ஆ) முகாமைத்துவத்தின் அண்மைக்கால வரலாற்று போக்கில் (recent historical trend) மூன்று முக்கிய எண்ணக்கருக்கள் (three major concepts) உள்ளன. ஒவ்வொரு எண்ணக்கருவையும் சுருக்கமாக விளக்குக.

(09 புள்ளிகள்)

(இ) முகாமைத்துவ நடைமுறைகளின் வரலாற்றுப் பின்னணியை நோக்கும்போது தொழிற்பிரிப்பு ஒரு முக்கிய கருப்பொருள் என்று பல்வேறு ஆய்வாளர்களாலும் விளக்கப்பட்டுள்ளது. இதுபற்றி கருத்துரைக்க.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

02. (அ) நிறுவனத்திட்டமிடலினதும் கட்டுப்படுத்தலினதும் தந்திரோபாய முக்கியத்துவம் என்ன எனக்கூறுக.

(05 புள்ளிகள்)

(ஆ) பெரும்பாலான தீர்மானங்கள் தனிநபர்களால் எடுக்கப்படுவதிலும் பார்க்க குழுவாகவே எடுக்கப்படுகிறது ஏன்? விளக்குக.

(05 புள்ளிகள்)

(இ) சிலவேளைகளில் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட திட்டங்கள் கூட விரும்புகின்ற பெறுபேற்றைத் தருவதற்குத் தவறுகின்றது. இதன் காரணத்தை விளக்குக.

(05 புள்ளிகள்)

(ஈ) சிறந்த இலக்குகளானது சில பண்புகளை தன்னகத்தே கொண்டிருக்க வேண்டும், இப்பண்புகளை ஸ்மாட் (SMART) என அழைக்கலாம். இப்பண்பு ஒவ்வொன்றையும் சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

03. (அ) சிறந்த ஒழுங்கமைத்தல் ஒன்றின் நன்மையான வெளிப்பாடுகள் சிலவற்றைக் கூறுக.

(05 புள்ளிகள்)

(ஆ) முகாமை விசாலம் (Span of Management) என்பது ஒரு முகாமையாளரின் கீழ் வரவேண்டிய கீழ்உத்தியோகத்தரின் எண்ணிக்கையைக் குறிப்பிடுகின்றது. புவியியல் ரீதியான ஊழியர்களின் அருகாமை (Geographical closeness of employees) முகாமை விசாலத்தை தீர்மானிக்கும் ஒரு காரணியாகும். விளக்குக

(04 புள்ளிகள்)

(இ) நிறுவனமொன்றில் மாற்றத்தை அமுல்படுத்தும்போது மாற்றமுகாமையாளர் ஆற்றும் பாத்திரம் என்ன?

(04 புள்ளிகள்)

(ஈ) முறையான மனிதவள முகாமைச் செய்முறையானது ஒரு நிறுவனத்தினது செயற்திறன், தொடர்ச்சியான நிலை, ஸ்திரத்தன்மை போன்றவற்றுக்கு பங்களிப்புச் செய்கிறது. இக்கூற்று தொடர்பாக உமது கருத்தைத் தருக.

(07 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

04. (அ) தலைமைத்துவமானது வழமையைவிட அபிவிருத்தியைக் கருத்தில் கொள்கின்ற நிறுவனத்திற்கு அல்லது கற்றல் நிறுவனத்திற்கு மிகவும் அவசியம் என்பது அறிஞர்களின் நம்பிக்கையாகும். இதனை நீர் ஏற்கிறீரா? விளக்குக.

(05 புள்ளிகள்)

(ஆ) சரியாகக் கூறுவதா (கதைப்பதா) அல்லது ஊக்கமாகக் கேட்பதா (speaking accurately or listening actively) முகாமையாளருக்கு இருக்கவேண்டிய மிகவும் முக்கியமான தொடர்பாடல் திறன்? விளக்குக.

(06 புள்ளிகள்)

(இ) அனுபவம் வாய்ந்த செயலாளர் ஒருவர் புதிதாக அமர்த்தப்பட்ட ஒரு செயலாளரைவிட தான் பெறும் வேதனம் குறைவானது என கண்டுபிடிக்கும் பட்சத்தில், அவளது பிரதிபலிப்பு எவ்வாறு இருக்கும்? அவள் எவ்வாறான உள்ளீட்டு வெளியீட்டு ஒப்பீட்டினை மேற்கொண்டு இதனை அளவீடு செய்வாள்? இந்நிலைமையினை சமப்படுத்தல் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

(09 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

05. (அ) முயற்சியாண்மை எனும் பதத்தை வரையறுப்பதுடன், முயற்சியாண்மை தொடர்பில் முயற்சியாளர் ஒருவருக்கான சுயஅபிவிருத்தி, மற்றும் நாட்டை அபிவிருத்தி செய்வதற்கான பங்களிப்பு என்பவை தொடர்பாக குறைந்தது நான்கு நன்மைகளைக் கூறுக.

(07 புள்ளிகள்)

(ஆ) முயற்சியாண்மைக்கான வாய்ப்புக்கள் தொடர்பில் ஆரம்ப தொழில் கரிசனையினதும் பிந்திய தொழில் கரிசனையினதும் நன்மைகளை (early career concern benefit and later career concern benefit) ஒப்பிடுக.

(08 புள்ளிகள்)

(இ) முயற்சியாண்மைக்கான வழிகளை (roots of entrepreneurship) சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

## SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## FIRST YEAR EXAMINATION IN BACHELOR OF BUSINESS ADMINISTRATION /COMMERCE (EXTERNAL) – 2008 / 2009 HELD IN APRIL - 2009

## BBA / COM 15 – MANAGEMENT AND ENTREPRENEURIAL SKILLS

**Answer all Questions**

**Time: 03 Hours**

---

01. (a) Describe the conceptual, human, and technical skills and their relevance for managers and non-managers.

(05 Marks)

(b) There are three major concepts of recent historical trend in management. Elaborate each concept briefly.

(09 Marks)

(c) 'Division of labor' is the important theme in historical roots of management practices and explained by various practitioners. Comment on this.

(06 Marks)

(Total 20 Marks)

02. (a) What is the strategic importance of organizational planning and controlling?

(05 Marks)

(b) Why are many decisions made by groups rather than by individuals? Explain.

(05 Marks)

(b) Sometimes even well designed plans fail to bring the desired results. Explain the reasons.

(05 Marks)

(d) Sound goals have some characteristics. It can be called SMART. Explain each character briefly.

(05 Marks)

(Total 20 Marks)

03. (a) State some of the beneficial outcomes of a good organizing.

(05 Marks)

(b) The span of management is the number of subordinates under one manager. Geographical closeness of employees is one of the determinant variables of span of control. Explain.

(04 Marks)

(c) What is the role of change agent in implementing the change for an organization?

(04 Marks)

(d) Proper human resource management process contributes to the effectiveness, continuity and stability of organization. Give your viewpoint on this comment.

(07 Marks)

(Total 20 Marks)

04. (a) Experts believe leadership is more important than ever in a learning organization. Do you agree? Explain.

(05 Marks)

(b) Is speaking accurately or listening actively the most important communication skill for managers? Explain.

(06 Marks)

(c) If an experienced secretary discovered that she makes less salary than a newly hired secretary, how would she react? What inputs and outcomes might she evaluate to make this comparison? Explain this situation based on the equity theory.

(09 Marks)

(Total 20 Marks)

05. (a) Define the term entrepreneurship, and state at least four benefits of entrepreneurship regarding entrepreneur self development and contribution for developing the country.

(07 Marks)

(b) Compare the early career concern benefit and later career concern benefit for an entrepreneurial opportunity.

(08 Marks)

(c) Briefly explain the roots of entrepreneurship.

(05 Marks)

(Total 20 Marks)

***